**Starting time 11.30 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 558/2004**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 18.04.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜகோபால் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** நான் தலைவாசல் வட்டம், நாவக்குறிச்சி கிராமத்தில் வசித்து வருகிறேன். மேற்படி நாவக்குறிச்சி கிராமம், தலைவாசல் வட்டத்தில் பெரிய ஊராட்சி என்றால், சரிதான். மேற்படி கிராமத்தில் மக்கள் தொகை சுமார் 5,000 இருக்கும். மேற்படி கிராமத்தில் வாக்காளர்கள் எண்ணிக்கை சுமார் 4250 இருக்கும். மேற்படி கிராமத்திலிருக்கும் ஜங்கம பண்டாரம் சமுதாயத்தை சார்ந்தவர்களின் பிரதிநிதியான நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிராமத்தில் ஆதி திராவிடர், ஒட்டர், வன்னியர்,குறவர், ஊராளி கவுண்டர், விசுகர்மா, எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்களும் வாழ்ந்து வருகிறோம்.

2. எங்களுடைய சமுதாயத்தில் நாங்கள் சுமார் 500 பேர் இருப்போம். மேற்படி எங்களுடைய கிராமத்தில் ஆதி திராவிட சமுதாயத்தினர் 38% பேர் இருப்பார்கள், ஊராளி கவுண்டர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் சுமார் 50% பேர் இருப்பார்கள். மற்ற

சமுதாயத்தினர் குறைவான விகிதத்தில் தான் இருக்கிறார்கள். எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தான் இந்த வழக்கை 1987-ஆம் வருடத்திலிருந்து நடத்தி வருகிறோம். எங்களுடைய முன்னோர்கள் கிருஷ்ணசாமி பண்டாரமும், சின்னையா பண்டாரமும் அசல் வழக்கு எண் 678/1987 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், விளம்புகை பரிகாரம் கோரியும் நடத்தி வந்தார்கள் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் உள்ள அனைத்து பிரதிவாதிகளும் கவுண்டர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான்.

3. மேற்படி வழக்கில் முதல் பிரதிவாதி லட்சுமண கவுண்டர், 2வது பிரதிவாதி பழனிமுத்து கவுண்டர், 3வது பிரதிவாதி பெருமாள் கவுண்டர், 4வது பிரதிவாதி செல்லமுத்து கவுண்டர், 5வது பிரதிவாதி தங்கராஜ் ஆகியோர்கள் நாவக்குறிச்சி கிராமத்தில் உள்ள கோயில்களுக்கு நாட்டாமைதாரர்களாக இருந்து வழக்கை நடத்தி வந்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. மேற்படி நபர்கள் நாட்டாமைதாரர்கள் என்றும் அவருக்கு பின்பு அவரது வாரிசுகள் நாட்டாமைதாரர்களாக இருந்து அவர்களது பணியை செய்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. மேற்டிப அசல் வழக்கு எண் 678/1987 -ல் நான் வாதிகள் தரப்பில் 6வது சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால், சரிதான்.

4. மேற்படி வழக்கில் உள்ள 20 கோயில்களும் பலதரப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர்களின் தனிக் கோயில் என்றால், சரிதான். மேற்படி கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மூப்பனார், மொன்னையாரப்பன், மப்புகான், சின்னையா, வேலடியான், ராஜா, தப்பட்டைகாரன் ஆகிய 7 கோயில்களும் பாத்தியப்பட்ட தனிக்கோயில்கள் என்றால், சரிதான். போயர்களுக்கு பெருமாள் கோயிலும், அருந்ததியர்களுக்கு மதுரை வீரன் கோயிலும் உள்ளது என்றால், சரிதான். எங்களுடைய சமுதாயத்திற்கு விநாயகர் கோவில் உள்ளது என்றால், இல்லை.

5. எங்களுக்கு சார்வாய் கிராமத்தில் குல தெய்வ கோயில் உள்ளது என்றால்,

சரிதான். ஊராளி கவுண்டர் சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு மலையம்மன் மற்றும் வடகரையான் என்ற முத்தையா கோவிலும் உள்ளது என்றால், சரியல்ல, அது எங்களுக்கு பாத்தியப்பட்ட குலதெய்வ கோவிலாகும். இந்த வழக்கில் மேற்படி கோவில்கள் எங்களுக்கு பாத்தியப்பட்ட கோவில்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். சாட்சி தற்போது மேற்படி கோவில்கள் எங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட கோவில் இல்லை என்றும், எல்லா சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்ட பொது கோவில் என்றும் கூறுகிறார்.

6. மேற்படி கோவில்கள் எல்லா சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்ட கோவில்கள் என்று 2 வழக்குகளிலும் சொல்லவில்லை என்றால், சொல்லியுள்ளேன். மேற்படி மலையம்மன் மற்றும் வடகரையான் கோவில்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், பொதுவாக பாத்தியப்பட்டது என்றோ எங்களது வழக்கில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கில் 4-ஆம் வாதி தற்போது உயிருடன் இல்லை. இந்த வழக்கில் மேற்படி 4 ஆம் வாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை மற்றும் இந்த வழக்கில் இறந்துபோன 5-ஆம் பிரதிவாதியின் வாரிசுகளையும் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை

2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 11.53 A.M.

**ஒப்பம்/- அ.நர்மதாராணி, பி.எஸ்.சி, எம்.எல்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**